IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 43/2023
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரதீப்குமார் | Caste | : | |
| Father Name | : | ஜோதி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of November, 2024.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊரும் வசித்து வரும் இடமும் வழக்குரையில் சொல்லப்பட்ட கர்நாடக மாநிலத்தில் வசிப்பதாக கூறும் முகவரிதான் என்றால் சரிதான். என்ன வேலை செய்கிறேன் என்றால் மெத்தை மற்றும் சோபா, குஷன் வேலை செய்கிறேன். ஆந்திர மாநிலம், பொம்ம சமுத்திரம் கிராமத்தில் பிரதிவாதியின் மனைவி பெயரில் உள்ள சொத்தை நான் தேங்காய் மகசூல் செய்ய குத்தகை எடுத்திருந்தேன் என்றால் குத்தகைக்கு தொகை செலுத்தியிருந்தேன், ஆனால் குத்தகையை எனக்கு கொடுக்கவில்லை.

2. மேற்படி குத்தகை காலமானது 01.01.2021 முதல் 31.12.2021 வரையிலானது என்றால் தேதி தவறு. 01.05.2021 ல் குத்தகை பேசி அன்றைய தேதியிலேயே தொகையை செலுத்தினேன். நான் குத்தகை எடுத்தது 01.01.2021 முதல் என்றும் அதற்கான முதல் தவணை தொகையைத்தான் 01.05.2021 ல் செலுத்தினேன் என்றால் தவறு.

3. மேற்படி தொகையை நான் பராமரித்து வரும் State Bank of India, Vidyanagar Branch, Hubli (Ex.A1) வங்கி கணக்கில் இருந்துதான் செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கில் இருந்துதான் தொகைகளை செலுத்தி வந்தேன் என்றால், இரண்டு மூன்று வங்கி

கணக்குகளிலிருந்து நான் தொகையை செலுத்தினேன். என்னுடைய முதல் விசாரணையிலும் வழக்குரையிலும் வங்கிகளின் மூலமே நான் பணம் செலுத்தி வந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4. குத்தகை எடுத்தது முதல் 180 தென்னை மரங்கள் குத்தகை இடத்தில் என்னுடைய சுவாதீனத்தில்தான் உள்ளது என்றால் இல்லை. மேற்படி குத்தகை சம்மந்தமாக ஏதேனும் ஆதாரங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி குத்தகையின் படி மேற்படி குத்தகை காலத்தில் தென்னை மரங்களின் மகசூலை எடுத்து அனுபவம் செய்து, அறுவடை செய்து பெற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்றால் சரிதான், ஆனால் எனக்கு குத்தகையே கொடுக்கவில்லை.

5. குத்தகையே எனக்கு கொடுக்கவில்லை என நான் கூறும்பட்சத்தில் எதற்காக தொகைகளை அனுப்பினேன் என்றால் முன்பணமாக தொகை செலுத்தும் பட்சத்தில்தான் குத்தகை தருவதாக கூறினார். முதல் தவணையானது 01.05.2021ல் நான் செலுத்தினேன். இரண்டாவது தவணை எப்போது செலுத்தினேன் என்றால் 4 அல்லது 7ம் தேதி மே மாதத்தில் செலுத்தினேன். மூன்றாவது தவணையை இரண்டு வாரங்கள் கழித்து 14.05.2021ல் செலுத்தினேன்.

6. குத்தகை எடுத்து சுவாதீனத்தில் நான் இருந்து வந்ததால்தான் மேற்படி இரண்டாவது மூன்றாவது தவணையை நான் செலுத்தினேன் என்றால் தவறு. மேற்படி குத்தகை காலத்தில் நான் தான் சுவாதீனத்தில் இருந்து மகசூலை எடுத்துக்கொண்டேன் என்றால் இல்லை. குத்தகையின்படி முழு மகசூலையும் நான் எடுத்துக்கொண்டதால் இவ்வழக்கு தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் எனக்கு இல்லை என்றால் தவறு.

7. நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலும் வழக்குரையிலும் குத்தகைக்கான நிலம் பூட்டப்பட்டிருந்தது என்று கூறியுள்ள சங்கதி பொய் என்றும் நான்தான் சுவாதீனத்தில் இருந்து மகசூலை அனுபவித்தேன் என்றும் சொன்னால் தவறு. எனவே பிரதிவாதியிடமிருந்து எந்த கோருரிமையும் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் தவறு. நான் குத்தகை எடுத்ததாக சொல்லும் நிலமானது பொம்ம சமுத்திரம் கிராமம், ஆந்திர மாநிலத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் வசித்து வருவது கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹீப்ளி என்றால் சரிதான்.

8. மேற்படி ஹீப்ளி–ல் உள்ள வங்கி கணக்கில் இருந்துதான் குத்தகை தொகையை செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி குத்தகை நிலமும் நான் வசித்து வரும் இடமும் பணம் செலுத்தி வந்த வங்கியும் குத்தகை நடைபெற்ற இடமும் இந்நீதிமன்ற ஆள்வரைக்கு உட்பட்டது அல்ல என்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னிடமிருந்து தொகை வாங்கியவர் காட்பாடியில் வசிப்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது.

9. குத்தகை எடுத்த நிலமானது பிரதிவாதியின் பெயரில் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்தான் எனக்கு குத்தகை நிலத்தை காட்டினார் என்னிடம் பணமும் பெற்றார். மேற்படி குத்தகை நிலமானது பிரதிவாதியின் பெயரில் இல்லாததாலும் உரிய தரப்பினரை இவ்வழக்கில் சேர்க்காததாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் எனவே இவ்வழக்கானது பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் இல்லை.

மறு விசாரணை=இல்லை.

(Sd/-)..K.Venkatesan
DISTRICT MUNSIF
KATPADI